# பெந்தொட பிரதேச சபை

# காலி மாவட்டம்

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 27 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 05 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

--------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெந்தொட பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசோட்டமும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

--------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 03 நிர்மாண வேலைக்காக ரூபா 762,946 தொகை ஒன்று மீளாய்வாண்டிற்காகவும், நிர்மாண வேலை ஒன்றிற்காக ரூபா 203,959 தொகை 2012 ஆண்டிற்காகவும், ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாமையால் மீளாய்வாண்டிற்கான மூலதன செலவுகள் ரூபா 762,946 இனால் குறைவாக திரண்ட நிதியத்திற்கு ரூபா 203,959 இனால் மிகையாகவும் மற்றும் பொது வழங்கல் கடன்கொடுத்தோர் ரூபா 966,905 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) ‘‘வீட்டுக்கு வீடு – கிராமத்துக்கு கிராமம்’’ பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் 2014 இன் கீழ் 09 நிர்மாண வேலைகளுக்காக உள்ளுராட்சி ஆணையாளரினால் அனுமதிக்கப்பட்ட தொகை ரூபா 4,746,599 எனினும் நிதிக் கூற்றுக்களில் மூலதனச் செலவுகள் என ரூபா 5,126,883 தொகை ஒன்று காட்டப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான மூலதன செலவுகள் மற்றும் கடன்கொடுத்தோர் ரூபா 380,284 வீதம் மிகையாகக் காட்டப்பட்டுள்ளது.

(இ) மீளாய்வாண்டிற்காக கிடைக்க வேண்டிய நீதி மன்றத் தண்டப் பண வருமானம் ரூபா 693,217 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் ரூபா 734,750 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்காக எழுத்தாணைக் கட்டணமும் தண்டப் பண வருமானம் மற்றும் வருமானக் கடன்பட்டோர் ரூபா 41,533 வீதம் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) நவீனமயப்படுத்தல் இலக்கம் 252-6569 கொண்ட கப் வண்டியின் பெறுமதியை மூலதனப்படுத்தும் போது வாகனத்தின் ஆரம்ப பெறுமதியான ரூபா 1,500,000 மற்றும் நவீனமயப்படுத்திய பின்னர் பெறுமதி ரூபா 1,800,023 இடையே வித்தியாசமான ரூபா 300,023 தொகையினை மூலதனப்படுத்துவதற்கு பதிலாக நவீனமயப்படுத்தியதற்கு பின்னர் காணப்பட்ட பெறுமதியாகிய ரூபா 1,800,023 இனை மூலதனப்படுத்தியமையால் நிதிக் கூற்றுக்களில் நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவுத் தொகை கணக்கின் மீதி ரூபா 1,500,000 இனை மிகையாகக் காட்டப்பட்டுள்ளது.

(உ) மீளாய்வாண்டின் போது தென் மாகாண பிரதான செயலாளரிடம் கிடைத்திருந்த RD 6882 கொண்ட டிரக்டர் வண்டி மற்றும் RX 1020 கொண்ட டேலர் வண்டியின் பெறுமதியினை பெறுமதி மதிப்பீடு செய்து மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் போது நன்கொடை ஒன்றாக கிடைத்திருந்த ரூபா 110,302 இற்கான நூலகப் புத்தகங்கள் மூலதன உதவி என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-----------------------------------------------------------------------------------------

08 கணக்கு விடயங்கள் தொடர்பாக கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகள் மற்றும் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் மீதிகள் இடையே ரூபா 2,144,837 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---------------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 163,353,459 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக காணி உறுதிகள், நாளது வரை பேணப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடு, கணிப்பீட்டுச் சபை அறிக்கைகள் மற்றும் மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் போன்ற சாட்சிகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

2. நிதி மீளாய்வு

------------------------

2.1 நிதி விளைவு

------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 6,445,200 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,459,925 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

-------------------------------------

2.2.1 வீத வரி மற்றும் ஏக்கர் வரி

----------------------------------------------

2014 திசெம்பர் 31 திகதியில் ரூபா 3,453,938 இற்ான வீத வரி, ரூபா 129,418 இற்கான ஏக்கர் வரி 1987 இலக்கம் 15 கொண்ட பிரதேச சபைச் சட்டத்தின் 158(1)(அ) பிரிவின் பிரகாரம் அறவீடு செய்வதற்காக செயலாளர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.2 வாடகை

-------------------

பெந்தொட, எல்பிடிய பாதையில் கடை ஒன்றில் இருந்து, பொதுச் சந்தையின் 03 கடைகளில் இருந்து மற்றும் பழைய பஸ் நிலையம் கடை ஒன்றில் இருந்து ரூபா 61,228 இற்கான நிலுவை கடை வாடகை வருமானம் ஒன்று 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட போதிலும் சபை செயலாளரினால் கடை வாடகை உடன்படிக்கைகளின் 04 வது நிபந்தனையின் பிரகாரம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.3 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக கட்டணம்

--------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 788,582 உம் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 13,625,235 உம் கிடைக்க வேண்டியிருந்தது.

2.3 மிகை விதிப்பு

-------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த நபர்களுக்கு எதிராக 1983 ஆண்டுகளின் போது விதிக்கப்பட்ட மிகை விதிப்புக்கள் தொடர்பாக 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 6,238 இற்கான தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

------------------------------------------------------

1988 இன் 74 ஆம் இலக்க (திருத்திய) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1975 இன் 01 இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் சட்டத்தின் தேவையின் பிரகாரம் 2013 ஆண்டிற்காக சபையின் உப தலைவர் உட்பட 11 அங்கத்தவர்களினாலும், 2014 ஆண்டிற்காக சபையின் தலைவர் உப தலைவர் உட்பட அனைத்து அங்கத்தவர்களினாலும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று வழங்கியிருக்கவில்லை.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

--------------------------------------------------

2015 மார்ச் 31 திகதிய இலக்கம் : 8/2005 கொண்ட பொது நிருவாக சுற்று நிருபத்தின் பிரிவு 11.5 இன் பிரகாரம் ஆதனக் கடன்களுக்கான வங்கி வட்டி வீதம் மற்றும் அலுவலர்களிடம் அறவிடப்படும் நூற்றிற்கு 4 இற்கான வட்டி வீதம் இடையே வித்தியாசம் ரூபா 234,173 தொகை சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது போதிலும் அப் பணத்தை உள்ளூராட்சி திணைக்களத்தில் இருந்து மீளளிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3.3 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

-------------------------------------------------------

சபைக்குச் சொந்தமான டிரக்டர் ஒன்றும் மற்றும் கப் வண்டி ஒன்று 06 வருடங்களை விட மிகையான காலம் முதல் சபையின் கராஜில் துருப்பிடித்த நிலையில் காணப்பட்டது. அதனை திருத்துவதற்காக அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுமையும்

---------------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

-------------------------------------

பாதீட்டில் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானத்திடையே முரண்கள் காணப்பட்டதுடன் சில செலவு விடயங்கள் சேமிப்பு காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்